1154

11 54
1·57

OFFICE OF THE REGISTRAR OF ... 7 - MAR 1957 MADRAS

# முல்லைக் கொடி

சான்றாண்மை இதழ் - குருகுலத் தாள்

கிழமைப் பதிப்பு] [வெள்ளிக் கிழமையில்

ஆசிரியர்: இளவழகனார்

| கிளை | துன்முகி, மாசி 4வ. | தளிர் |
|---|---|---|
| 9 | 15—2—57 | 18 |

9-ம் ஆண்டுக்கையொப்பம்
(14-10-56 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள் — கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

முகவரி:

குருகுலம்,
மதுராந்தகம் (அஞ்.);
செங்கற்பட்டு மாவட்டம்:
தமிழ்நாடு.

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## சால்புடைமை

திருவள்ளுவர் தமது திருக்குறள் முழுதும் ஒரே ஒரு நோக்கத்தில் ஒன்றிச் செல்கின்றார். 'மக்களினத்தைச் சான்றாண்மை கொள்ளச் செய்தல் ஒன்றே அவர் சேவை

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் அவனை ஈன்ற பொழுதினும் பெரிது உவக்கும் என்று கூறிய குறளில், பிறப்பின் நோக்கம் அதாவது பிறந்து வாழ்தலின் நோக்கம் ஒவ்வொரு மகனும் சான்றோன் ஆதலே என்று தெளிவாக்கி யிருக்கின்றார்.

நல்லவை யெல்லாம் நன்மகனுக்குக் கடமை என்றும், குணம்நிறைதலே நிறைதலுடைமைஎன்றும் 'நாண்' 'கண்ணோட்டம்' என்னும் பொருளியல் குணங்களும், 'அன்பு' 'ஒப்புரவு' என்னும் இல்லறக் குணங்களும் 'வாய்மை' முதலிய துறவறக் குணங்களும் என எல்லாக் குணங்களும் சால்பு ஊன்றிய தூண் என்றும், இனியவே செய்தல் சால்பு என்றும் சான்றாண்மை குன்றின், நிலம் தாங்காது என்றும், அதன் முதன்மையை ஆசிரியர் சான்றாண்மை அதிகாரத்தில் பலபடியாக விளக்குகின்றார்.

மனிதன் நிறைந்த மனிதனாக வாழ்க்கையைப் பண்படுத்திக் கொள்ளுதல் எவ்வளவு நல்லது! திருவள்ளுவருக்கு எவ்வளவு உள்ளங் குளிரும்! திருக்குறள் சேவை எவ்வளவு பயனுடையதாய் எவ்வளவு எடுத்துக் காட்டானதாய் இருக்கும்!

அதனை நிறைவு செய்வது பொறையுடைமை என்னும் ஒரு குணம் என்றால், அதனை எவ்வளவு கருத்தாய்க் காத்துக்கொள்ள வேண்டும்! பொறையுடைமை நீங்கினால் நிறையுடைமையும் நீங்கிவிடுமாமே!

பொறுக்கப் பொறுக்க ஆற்றல் தமக்கும் பிறர்க்கும் மிகுந்து மிகுந்து நிறையுடைமையை உண்டாக்குகின்றது. இயைபு தெரிந்த பின்னும் மக்கள் அதனை இழப்பது எப்படி?

***நிறையுடைமை நீங்காமை***
***வேண்டிற் பொறையுடைமை***
***போற்றி ஒழுகப் படும்.***

நிறையுடைமை நீங்காமை வேண்டின் - சால்புடைமை தன்னிடத்திலிருந்து நீங்காமலிருத்தலை விரும்பினால், பொறையுடைமை போற்றி ஒழுகப் படும் - பொறுமை யுடைமை நீங்காதபடி காத்தொழுகப் படும்.

நிறை - நிறைவு; நிறைவுடைமை - சான்றாண்மை; மனிதன் எல்லாப் பண்புகளும் நிறைந்த மனிதனாயிருத்தல்; வாழ்க்கையின் நோக்கம் இந்நிலையை அடைதலாயிருத்தலால், அதற்கு முதன்மை தந்துவிதந்தார்.

போற்றுதல் - காத்துக் கொள்ளுதல்; ஒழுகுதல்-அதற்கேற்றபடி நடந்து கொள்ளுதல்.

சான்றாண்மை குன்றாமலிருக்க விரும்பினால் பொறுமைக் குணம் குறையாதபடி காத்து நடந்துகொள்ளவேண்டியிருக்கும் என்பது கருத்து; பொறுமை குறைந்தவன் சான்றோனாதல் செல்லாது என்றபடி.

**வம்மின் ஆடவர் மாதரும் வம்மின்; வம்மின் செல்வர் எளியோர் வம்மின்!**

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"



"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.


முல்லைக் கொடி

| கிளை | துன்முகி, மாசி | தளிர் |
|---|---|---|
| 9 | 15-2-57 | 18 |


# மக்களாட்சியும் கல்லூரிகளும்

'முடியாட்சி என்பது நம் காலத்துக்குதவாதது. பொருத்தமற்றது, முடியாட்சியால் முழுதுலகும் செழித்து வாழ்ந்ததெல்லாம் பழங்கதை. இக்காலச் சூழ்நிலைக்கும் நாகரிகத்துக்கும் பொருத்தமானது மக்களாட்சியே' என்பது ஆன்றோர் உரைக்கும் ஆய்வுரை.

சற்றேறத்தாழ உலகம் எங்கணும் மக்களாட்சிதான் இன்று மாட்சிமையுடன் திகழ்கின்றது.

சுமார் எழுபதாண்டுகட்கு முன் தொடங்கிய நாட்டுரிமைப் போராட்டத்தின் வெற்றியாக நம் இந்தியத்துணைக் கண்டத்திலும் இன்று மக்களாட்சி நடைபெறுகின்றது. இந்த நிலைமையடைய நம் நாட்டுத் தலைவர் பெருமக்கள் பட்ட பாடுகளும் செய்த தியாகங்களும் உலகறிந்தவை.

நம் மக்கள் ஆட்சியில் இன்று, அங்கும் இங்குமாகக் காணப்படும் சிலபல குறைகளையும் நாம் மறுப்பதற்கில்லை. மறைத்துப் பேசவும் வழியில்லை.

ஆட்சியின் பொறுப்பான பதவிகளில் இடம் பெறுவோர் யாவரும் ஆழ்ந்து விரிந்த கல்வியறிவும் நல்லொழுக்கமும் எதிர்காலத்தை நுனித்தறியும் நுண்ணறிவும், உறுதியும் கட்டுப்பாடும் பொருந்தியவர்களாக இருப்பின் இச் சிற்சில குறைகளும் நாட்டில் தலைகாட்டா.

மாந்தருள் மாணிக்கமாக இன்று திகழும் நம் **பண்டித ஜவஹர்** போன்ற பெருமக்களாக ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் அனைவரும் திகழ வேண்டும்.

'கல்வியறிவும் ஒழுக்கமும் ஒருங்கு பொருந்திய சீலர்களாகப் பதவியில் இருப்பார் அனைவரும் திகழ வேண்டுமானால் அதற்குத் தக்க வாயில் வகுக்கக் கூடியது பல்கலைக் கழகங்களே' என்று அறிஞர் திரு சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் திருச்சியில் நடந்த கலைவிழாவில் கூறியிருக்கிறார்.

சென்ற ஞாயிறன்று, சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாவை ஒட்டித் திருச்சியில் நடந்த கலைவிழாவில் விரிவுரையாற்றிய இராஜாஜி அவர்கள் மக்களாட்சி நாட்டில் மாட்சிமையுடன் திகழ வேண்டுமானால் அறிவும் ஒழுக்கமும் வாய்ந்த நல்லோர் தலைமைப் பதவிகளில் இடம் பெறுவது நல்லதென்றும் அத்தகு வாய்ப்பளிக்கக் கூடியது பல்கலைக் கழகங்களே என்றும் கூறியது பொருத்தமுடையது என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

பழங்காலங்களில் குருகுல வாசத்திலிருந்து வெளிவந்த மாணவர்கள் ஆழ்ந்த நல்லறிவும் கட்டுப்பாடான ஒழுக்கமும் பெற்று வெளியேறினர். அறிவும் ஒழுக்கமும் பெறுதற்கு அடிப்படையாகச் சமயக் கொள்கைகள் துணை செய்தன. தெய்வ நம்பிக்கையில் திகழ்ந்த அவர்கள் செயலாற்றும் திறத்தில் தலை சிறந்து விளங்கினர். குருகுல வாசத்தில் அடிப்படையாக விளங்கிய 'பிரமசரிய' ஒழுக்கமும் கட்டுப் பாடுகளும் அவர்களைச் செழித்த நல்லறிவும் ஆற்றலும் கொண்டு விளங்கச் செய்தன. இன்று காணும் பல்கலைக்கழகங்களும் அப்பழங்காலப் 'பிரம சரிய' ஒழுக்கத்தைச் சற்று வேறு வகையில் போதிப்பனவே.

இந்தவகையில் பல்கலைக்கழகங்களிற் கல்விபயிலும் மாணவர் ஒவ்வொருவரும் மக்களாட்சியில் தலைமை தாங்கி நடத்தக் கூடிய நிலைமைக்குத் தம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ளல் முதன்மையாகின்றது. அத்தகைய தகுதிக்குப் படிப்பறிவு மட்டும் போதாது, நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் மிக முதன்மை. நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் சமய வுணர்வு ஒன்றால் தான் பெறமுடியும் ஆயிரக்கணக்கான நூல்களைப் படிப்பதால் மட்டும் அறிவு வளர்ந்துவிடாது.

நூல்கள் பல படித்து முன்னேறுவதால், மேடைகளில் மணிக்கணக்காக அழகாகவும் ஆற்றல் திகழவும் பேசலாம். ஆனால் அவ்வறிவு, ஒழுக்கமும் கட்டுப்பாடும் இல்லாமல், நிறைவு பெறாது. எனவே திரு இராஜாஜி கூறியுள்ளதுபோல் கல்லூரியில் கல்வி பயிலும் போதே ஒவ்வொரு மாணவரும் தம் கல்வி நேரங்களை வீண் ஆரவாரங்களுக்கும் பொருளற்ற

(7-ம் பக்கம் பார்க்க)

மொழிப் பகுதி – அறிவு வலிமைக்கு

# சிலை பேசிற்று

(மணி)

சிலை பேசிற்று! அதன் பேச்சிலே சிரிப்பு இருந்தது; இரக்கம் இருந்தது; ஊற்றுப்பெருக்கெனத்தன் அன்பை வெளிப்படுத்தியது; தன் உள்ளுணர்ச்சியை எடுத்துக் காட்டியது! வீரம் தெரிந்தது; மனத்தின் மென்மையையும், தாய்மையையும் கூட வெளிப்படுத்தியது.

சிலை பேசிற்றா? கற்சிலை பேசிற்றா? சிற்பி ஒருவன் சிற்றுளி கொண்டு செதுக்கிய கற்சிலை பேசிற்றா?

ஆம் இது வியத்தற்குரிய செய்திதான்!

மாலை நேரம் பறவைகள் கூட்டங் கூட்டமாகத் தம் கூடுகளுக்கு ஏகின ஆனால் நானோ அப்பொழுதுதான் வீட்டை விட்டு வெளியேறினேன் சிறிது உலாவிவர. கால்கள் சென்று கொண்டே இருந்தன. ஊரையும் தாண்டி ஒரு மலைக் குன்றையும் அடைந்தேன். வசதியாக அமர அங்கும் இங்குமாகப் பார்த்தேன். அமருவதற்கு ஏற்ற ஒரு சதுரக் கல் கிடைத்தது, சென்று அமர்ந்தேன்.

அமர்ந்தபோது காலிலே ஒருகல் தட்டுப்பட்டது. அதனைப் பார்த்தேன். ஓர் உருவமாகக் காட்சி யளித்தது. தூக்கி நிறுத்தினேன். நின்றது.

நன்றாகக் கூர்ந்து கவனித்தேன். அது ஒரு புன் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தது

சிரிப்பு ஏனென்று வினவினேன். "சிரிக்காமல் என் செய்வது? எங்கள் நிலையே சிரிப்பிற்கல்லவா இடமாகி இருக்கின்றது"

"எப்படி" என்றேன்?

"அழகாகத்தான் என்னைச் செதுக்கினான் சிற்பி. அவன் தன் கைத்திறன் அனைத்தையும் தான் காட்டினான். சிற்பக் கலைக்கே பேர் பெற்ற நாடல்லவா நம் தமிழ் நாடு. இன்று அச்சிற்பக் கலையையாராகிலும் எண்ணுகிறார்களா? சிறந்த சிற்பியைத்தான் நாம் இன்று காண முடிகின்றதா?

"என்னைக் கொண்டு சென்று ஒரு பொது இடத்திலே பலரும் பார்க்கக் கூடிய இடத்திலே வைப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். நான் அவ்விடத்திலிருக்கும் போது அவ்விடத்திற்கு அழகைக் கொடுக்கும் ஒரு கருவியாகத் தானே இருக்கிறேன்.

"அவ்வாறு எண்ணாமல் வேறு எவ்வாறுதான் எண்ணுவார்கள் உன்னை" என்றேன்.

"கேள். நீ ஒருவனாவது என்னைக் கேட்கின்றாயே அதுவே போதும்.

"தஞ்சையிலே வானளாவக் கோபுரம் இருக்கின்றது. திருச்சியிலும் என்னைப்போன்ற சிறந்த சிற்பங்கள் இருக்கின்றன." மாமல்லபுரத்திலும் நாங்கள் இருக்கின்றோம்."

"தென்னாட்டில் நீங்கள் இல்லாத இடம்தான் ஏது" என்றேன்.

தென்னாட்டிலே இருக்கிறோம். காண்பவர்கள் "அழகாக இருக்கிறது; செய்த சிற்பியின் திறமை; அவன் கற்பனை அளவற்றது," என்று புகழ்ந்து சென்றுவிடுகிறார்கள். அருமையான நற்சாட்சிப் பத்திரம் ஒன்றை வாயினால் அப்பொழுது சொல்லி விட்டுப் போகிறார்கள் அச்சிற்பியைப்பற்றி!"

"உங்கள் புகழுக்குத்தான் என்ன குறைச்சல்" என்றேன்.

"புகழ்; அதிலே ஒன்றும் குறைச்சலில்லை. உண்மைதான், ஆனால் எங்களை யாரும் சரிவரக் கவனிக்கவில்லை. நாங்கள் கூறுவனவற்றைக் கேட்கவில்லை. வருவதும், கண்ணால் அரைகுறையாக எங்களைப் பார்த்தும்; வேறு ஏதேனும் பேசிக் கொண்டு எங்களைக் கண்டதுபோல் வேறு பாவித்தும்; சென்றுவிடுகிறார்கள். ஆனால் நாங்கள் கூறுபவைகளைக் கேட்பதில்லை. மகிழ்ச்சியாக மக்கள் வாழ எண்ணுகிறோம். அதனுடனே பண்பாட்டையும்; வரலாறுகளையும் கூறுகிறோம். கேட்பதில்லை. எனவே நான் சிரிக்கிறேன், இல்லை நாங்கள் எல்லாரும் சிரிக்கிறோம்." (வரும்)

சமயப் பகுதி – அருள் வலிமைக்கு

# வாழற்கினிய வழி

"இளம்பூரணன்"

ஆண்டவன் கருணை அளப்பரியது. அகில சராசரங்களையும் அளித்துக் காப்பது. ஆண்டவனை 'அருளாரமுதப் பெருங்கடல்' என்று சான்றோர் கூறுவது அனைத்தும் நல்ல அனுபவ மொழிகள். சான்றோர்கள் இறைவன் அருட் செல்வத்தை நன்கு நுகர்ந்தவர்கள். அவ்வின்பத்தில் திளைத்து மகிழ்ந்தவர்கள். கருணையின் ஆட்சியினால், தம் உள்ளும் புறமும் ஒருங்கே தூய்மை அடையப் பெற்றவர்கள். அத்தகைய மேலோர் உளம் சிறிதும் மாசு கலவாதது, பளிங்கெனத்திகழ்வது தீய சிந்தனைகளும் உலகத் தடுமாற்றங்களும் உலகச் செயல்களின் உயர்வு தாழ்வுகளும் அணுகாதது. தூய நறுமலரை ஒத்தது. இத்தகைய நெஞ்சத்தில்தான் ஆண்டவன் அருளொளி வடிவங் கொண்டு எழுந்தருளியிருப்பதாகச் சான்றோர் மொழிந்துள்ளார்கள்.

'மலர்மிசை யேகினான்' என்ற தமிழ்மறைத் தொடருக்கு உரை வகுத்த பரிமேலழகர், 'அன்பால் நினைவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு [இறைவன்] விரைந்து சேறலின் ஏகினான் என இறந்த காலத்தாற் கூறினார்' என்று விளக்கவுரை வகுத்து அச்சொல் மூன்று காலத்தையும் உணர்த்துவதாகவும் தெளிவித்தார். இதனால் அன்பர் பெருமக்களின் மாசற்ற மலர் போன்ற நெஞ்சில் இறைவன் என்றும் நீங்காது வீற்றிருந்து இன்னருள் புரிவான் என்பது தேற்றமாகின்றது.

ஆண்டவன் திருவருளையே எண்ணி எண்ணி நெஞ்சம் நெக்குருகும் பேறு வாய்க்கப்பெற்ற அடியார்களுக்கு ஐம்புலத் தொல்லைகள் தாமாகவே பையப்பைய விலகி விடுவது உறுதி. ஐந்து பேரறிவும் ஆண்டவன் திருவடிப் பணிக்கே தகுதியாக நாளடைவில் பக்குவம் அடைந்து விடுவதால் அவை திருவருளில் எளிதில் திளைக்கச் செய்யும் இனிய துணைவர் நிலையில் நிற்பதாய், உயிருக்கு உதவி புரிகின்றன. தாம் ஆட்சி செய்ததெல்லாம் ஒழிந்து ஆணைவழி நின்று பணிந் தொழுகுகின்றன.

ஐம்புலத் தொல்லைகள் இல்லையாயினபின் அவற்றால் உண்டாகும் ஆசைகள் அனைத்தும் அடியோடு மாய்ந்து விடுகின்றன. இறைபணி ஒன்றே அவர்கள் உள்ளத்தில் இடம் பெறுகின்றது.

'கூடும் ஒண்கழல்
கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறல்'

உடையவராக அப்பெருமக்கள் திகழ்வர். இவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. எண்ணிய எண்ணியாங்கு பெறுதற்கும் அவர்க்கு இயலும். இவ்வுலகையே மாற்றியமைக்கவோ, புத்துலகு காணவோ, அளிக்கவோ துடைக்கவோ இவர்க்கு எளிதில் கூடுவதாகும். ஆனால் குணமென்னும் குன்றேறி நிற்கும் அத்தகு மேலோர் தம் அருள் வல்லமையை உலகச் செயல்களுக்காகப் பயன்படுத்த மாட்டார்கள். அருளின் செழுந்துணையால் உலகக் கட்டுகளை அறுத்தெறிந்து ஆண்டவன் திருவடிச் செழுநிழலின் இன்புற்று வாழவே முயல்வர்.

காரைக்காலம்மையார் ஆண்டவன் அருளாரமுதப் பெருங்கடலில் நன்கு திளைத்தவர்கள். அவ்வருளமுதத்தை நெஞ்சார உண்டு தேக்கியவர்கள்

இறைவன் திருவடித் தாமரைகளை நெஞ்சங் குழைய நினைந்து வழிபடும் நல்லடியார்க்கு நினைப்பதெல்லாம் இனிதாகவும் எளிதாகவும் கைகூடும் மாட்சியைக் கண்டிருந்தும் தாமும் அவ்வாறு நினைந்து அருட்பேற்றை எளிதில் அடைந்து நல்வாழ்வு வாழ வகையின்றி வறிதே காலம் போக்கும் ஏழை மாந்தர்களைக் குறித்து அம்மையார் பெரிதும் இரங்குகின்றார்கள். 'எளிய இச் செயல் ஒன்றால் எவ்வளவோ நலம் பெறலாமே! எம்பெருமானை அகத்தே நினைந்திருக்கும் உள்ளம் உடையீராய் வாழும் திறத்தினை எளியதென்று அறிவீரல்லீர், ஆ! நும் நிலை மிக இரங்கத்தக்கதே!'' என்று உள்ளங் கசிந்துரைக்கின்றார்கள்.

எளிய திதுவென்றே
ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர்
ஆ! ஆ! - ஒளிகொள்மிடற்
றெந்தை அராப் பூண்டுழலும்
எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழும் திறம்

எனவரும் அற்புதத்திருவந்தாதிச் செழுங்கருத்துக்கள் நம்மவர்க்கு என்றும் நல்வழி வகுப்பதாகும். வெறும் இயந்திரம் போலப் பொருளற்ற வாழ்வில் காலம் கடத்தும் நாம், ஆண்டவனை நெஞ்சாரச் சிறிது நேரமாவது நினைந்து பழகுதல் எவ்வளவு முதன்மை என்பது இதனால் தெரிகின்றதல்லவா.

ஃ ஃ ஃ ஃ

மாணவர் பட்டியின் சென்ற வாரத் தொடர்ச்சி

மா, வ - எ. 87
Sri A. G. SHANMUGAM AVL.
T. B. P. "K" Type
Tungabadra Project
Hospet Damside
BELLARY Dt.,

மா, வ - எ. 88
திரு பத்மாவதியம்மாள் அவர்கள்
43, கந்தசாமி கோவில் தெரு,
குயப்பேட்டை, சென்னை-12.

மா. வ - எ. 89
திரு த. பூ. கந்தசாமி அவர்கள்
1-6, காளப்பாச்சாரி தெரு,
சென்னை-3.

மா, வ - எ. 90
திரு வ. முருகேசன் அவர்கள்
77, பரத்வாஜீஸ்வரர் கோவில் தெரு,
புலியூர், கோடம்பாக்கம்.
சென்னை-24.

மா. வ - எ. 91
திரு எம். கோவிந்தன்குட்டி
9, அக்ராரம் தெரு,
சிந்தாதிரிப் பேட்டை,
சென்னை-2.

மா. வ - எ. 92
திரு சின்னகுழந்தையம்மாள்
93, சிமிட்ரி ரோடு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை-21.

மா, வ - எ. 93
திரு கே. எஸ். வேங்கடராமன்
அவர்கள்
252, ஐரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

மா. வ - எ. 94
திரு நவநீதம்மாள் அவர்கள்
2-12, ஐஸக் தெரு,
சென்னை-3.

மா. வ - எ 95
திரு எஸ். விருத்தாம்பாள் அவர்கள்
6, சுப்பிரமணிய முதலி தெரு,
புரசை, சென்னை-7.

மா. வ - எ. 96
திரு மாணிக்கம்மாள் அவர்கள்
1-7, விச்சூர் முத்தையா முதலி தெரு,
சூளை, சென்னை-7.

மா. வ- எ. 97
திரு இராஜாமணியம்மாள் அவர்கள்
11, முதல்நாராயணன் தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 98
திரு டாக்டர் அழகப்பா அண்ணாமலை
அவர்கள்
'சேவா' வள்ளிமலை கிளினிக்
குத்தாலம், தஞ்சை ஜில்லா

மா, வ - எ. 99
திரு. கே. முருகேசன் அவர்கள்
2-223, தங்கசாலைத் தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 100
திரு கே. ஆர். சம்பந்த முதலியார்
அவர்கள்
33, வடமலைமேஸ்திரி தெரு,
சென்னை-1

மா. வ - எ. 101
திரு க. பழநி அவர்கள்
36, ஸ்டிரான்ஸ் ரோடு,
சென்னை-12.

மா. வ - எ. 102
திரு ஜகதாம்பாள் அவர்கள்
W-o முத்துசாமி செட்டியார்,
7, வெங்குசெட்டித் தெரு,
சென்னை-3.

மா. வ - எ. 103
திரு எம். துரைக்கண்ணு அவர்கள்
10, வெங்கடேச கிராமணி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை-2.

மா, வ - எ. 104
திரு வெ. வேம்பன். அவர்கள்
1-1, பிரான்சிஸ் டுரின் தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 105
திரு நேமம். முத்துக்குமாரசாமி அவர்கள்
15, பரமசிவ செட்டித் தெரு,
சென்னை-3.

மா, வ - எ. 106
திரு ஆ. சம்பத்து அவர்கள்
519. திருவொற்றியூர், ஐரோடு,
சென்னை-21.

மா. வ - எ- 107
திரு பி. சக்கரபாணிராசு அவர்கள்
119, ஆதம்சாயபு தெரு,
இராயபுரம், சென்னை-13.

மா, வ - எ. 108
திரு பெ. மாசிலாமணி அவர்கள்
9, பரசுராம முதலி தெரு,
பிரம்பூர் பாரக்ஸ், சென்னை-12.

மா, வ - எ. 109
திரு மா. குமாரசுவாமி அவர்கள்
5, ஆநந்தவேலு முதலி 1-வது தெரு,
பிரம்பூர், சென்னை-11.

மா, வ - எ. 110
திரு அ. அண்ணாமலை அவர்கள்
ஆசிரியர், திருவள்ளுவர்ப் பள்ளி
எரமலூர், நல்லூர் (அஞ்சல்)
(வழி) தள்ளார்
வ. ஆ. மாவட்டம்.

மா, வ - எ. 111
திரு கோ. உலகநாதன் அவர்கள்
58, அண்ணாபிள்ளை தெரு,
சென்னை-1.

மா, வ - எ. 112
திரு பெருந்துறைமணி மொழியன் அவர்கள்
புலவர் புகுமுக வகுப்பு,
அரசர் கல்லூரி, திருவையாறு (அஞ்சல்)
தஞ்சை, மாவட்டம்.

மா, வ - எ. 113
திரு எம் நடேசபிள்ளை அவர்கள்
கூட்ஸ் ஸ்டேஷன் மாஸ்டர்,
சேலம் மார்கட். ஆர். எஸ்.
சதர்ன் ரயில்வே.

மா, வ - எ. 114
திரு ஆண்டாளம்மாள் அவர்கள்
5, கருப்பண்ணன் தெரு,
சென்னை-1.

மா. வ - எ. 115
திரு ஆர். ஷண்முகம் அவர்கள்
3B. பெரம்பூர், டேங்க்பண்ட் ரோடு,
சென்னை-12.

மா. வ - எ. 116
திரு துரைசாமி ஆச்சாரி அவர்கள்
1, மன்னார் கோவில் தெரு,
சென்னை-3.

மா. வ - எ. 117
திரு ஏ. சின்னப்பன் அவர்கள்
கிளர்க்
ஜி. ஏ. இரண்டாம் செக்ஷன் கூட்ஸ்,
டிராபிக் அக்கௌண்ட்ஸ்,
எப். ஏ. அண்டு சி. ஓஸ். ஆபீஸ்,
தென்னிந்திய ரயில்வே,
சென்னை-3.

மா. வ - எ. 118
திரு நாகேஸ்வரன் அவர்கள் கிளர்க்.
சென்ட்ரல் எப். ஏ. அண்டு சி. ஓஸ். ஆபீஸ்
தென்னிந்திய ரயில்வே,
சென்னை-1.

மா. வ - எ. 119
திரு எஸ். திருஞானசம்பந்தம்
அவர்கள்
தெற்கு தெரு. அன்னப்பன் பேட்டை,
திட்டை (அஞ்சல்),
தஞ்சை மாவட்டம்.

மா. வ - எ. 120
திரு விஜயலக்ஷ்மி அவர்கள்
3-12, குமரப்ப முதலி தெரு,
நுங்கம் பாக்கம், சென்னை-12.

---

குருகுலத்தில் மாணவர், அன்பர், ஆர்வலராகச் சேர்ந்து ஆசிரியரவர்கட்கு
காணிக்கை வழங்கிவரும் குருகுலச் சிறப்பினர்.

அன்பர்:

அ. வ - எ. 201
திரு க. முத்து வெங்கடாசலம்
அவர்கள்
46, ஷெனாய் நகர்,
அமிஞ்சிகரை, சென்னை-29.

அ. வ - எ. 202
திரு பெ. கிருஷ்ணையா அவர்கள்
5, ரைஸ் மில் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 203
திரு க. ரா. ஆடலரசு அவர்கள்
27, செட்டித் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை-15.

அ. வ - எ. 204
திரு என். புருஷோத்தம் அவர்கள்
5, தேனாம்பேட்டை ராமசாமி முதலி தெரு,
சென்னை-1,

அ. வ - எ. 205
திரு எஸ். நடேச முதலியார்
அவர்கள்
18, வைத்தியநாத முதலி தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 206
திரு ச. பழனிவேல் முதலியார்
அவர்கள்
39. நம்புலையர் தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 207
திரு த. கொ. சம்பந்தம் அவர்கள்
2-7, பெருமாள் முதலி தெரு.
கொண்டிதோப்பு, சென்னை 1.

அ. வ - எ. 208
திரு கே. பி. சண்முகம் பிள்ளை
அவர்கள்
3-96 கிடங்குத் தெரு, சென்னை 1.

அ. வ - எ. 209
திரு த. தனசேகரன் அவர்கள்
26 தாண்டவராயப் பிள்ளை தெரு,
சென்னை 1.

அ. வ - எ. 210
திரு வேணுகோபால் செட்டியார்
அவர்கள்
41. பரமானந்த முதலி தெரு,
சென்னை-1.

அ. வ - எ. 211
திரு பி. எஸ் வேதாசலம் அவர்கள்
71 பேபர் மில்ஸ் ரோடு,
பிரம்பூர், சென்னை-11.

அ. வ - எ. 212
திரு சு. வடிவேல் அவர்கள்
25 வெங்கடேச நாயக்கன் தெரு,
இராயபுரம், சென்னை-13.

அ. வ - எ. 213
திரு எஸ். எ. கோவிந்தசாமி அவர்கள்
1-3 சுந்தர விநாயகர் கோவில் தெரு,
கொருக்குப் பேட்டை, சென்னை 21.

அ. வ - எ. 214
திரு ஆ. பாலகிருஷ்ண நாயுடு
அவர்கள்
62 ஏழுகிணறு தெரு, சென்னை 1.

அ. வ - எ. 215
திரு எஸ் ஆதிநாராயணன்
அவர்கள்
தி யீஸ்ட் அஸெட்டிக் கோ
தபால் பெட்டி எண். 146.
சென்னை-1.

அ. வ - எ. 216
திரு ஆர். நடேசன் அவர்கள்
11. வெங்கடேச கிராமணி தெரு,
சிந்தாதிரிப் பேட்டை சென்னை 2.

அ. வ - எ. 217
திரு க. அண்ணாமலை அவர்கள்
82A. சூரியநாராயண செட்டித் தெரு,
இராயபுரம், சென்னை-13.

அ. வ - எ. 218
திரு டி. துரைசாமி முதலியார்
அவர்கள்
3, பட்டாபிராமய்யர் தெரு,
சென்னை. 1.

அ. வ - எ. 219
திரு பி. சுந்தரம் அவர்கள்
ஜயவிலாஸ்; சூளைமேடு,
கோடம்பாக்கம், சென்னை 24.

அ. வ - எ. 220
திரு த. பாக்ய சேகரன் அவர்கள்
26. தாண்டவராயப் பிள்ளை தெரு.
சென்னை-1.

அ. வ - எ. 221
திரு கே. எம். பாபு முதலியார்
அவர்கள்
26-1, பர்க்கிட் ரோடு,
தியாகராயநகர், சென்னை-17.

அ. வ - எ. 223
திரு எஸ். என். எஸ். நாகரத்தினம்
அவர்கள்
26, தங்கசாலைத்தெரு, சென்னை-3.

பணிப் பகுதி — உணர்வு வலிமைக்கு

# குருகுலத்தின் பணித்திட்டம்

(ஆசிரியர்)

## திருக்குறள் செயல்முக அமைப்பு

உருவான ஆக்கவேலையே (நிர்மாணத் தொண்டுகளே) குருகுலத்தின் செயல் முறை. பணித்திட்டம் இருவகை. மாம்பாக்கத்தில் திருக்குறளுக்குச் செயல்முக அமைப்புக் கோலுதல் ஒரு வகை; மற்றொரு வகை, திருக்குறட் கருத்துக்கிணங்க மக்களுக்குப் பணிபுரிதல்.

இவை முறையே, திருக்குறள் நோக்கால் உலகை நோக்குதல் எனவும், உலக நோக்குப்படி திருக்குறளில் ஒன்றுதல் எனவும் அமையும். இவற்றுள் ஒருவகை முடிந்த பின் மற்றொரு வகை நிகழ்தல் என்பதின்றி இருவகையும் ஒருங்கே நிகழ முயற்சி நாளும் நடைபெற்று வருகிறது.

திருக்குறள் உலக நூல்; உலக மக்கள் அனைவர்க்கும் வாழ்க்கை மறையாய் உள்ளது; நூலுலகத்தில் ஞாயிறுபோல் திகழ்வது. தமிழ்நாடு செய்த பெருந் தவத்தால் இப் பொது மறை தமிழ் மொழியில் அமைந்தது; அமைந்து ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், தமிழர் கையில் இன்னும் அது வித்தாகவே உள்ளது.

உலகு அவாம் பேரறிவுத் திருவாகிய அதனைத் தமிழகத்தில் ஒரு செயல்முக அமைப்புப் பண்ணையில் ஆழ ஊன்றி உரிய செய்கைகளுடன் நன்கு வளர்த்தால், அது வானுற ஓங்கி வளர்ந்து பழுமரம் உள்ளூர்ப் பழுத்தது போல் உலக நாடுகள் பலவற்றிற்கும் மேன்மேற் பயன் தந்து திகழக் கூடும்.

மாம்பாக்கத்தில், திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரத்துக்கும் ஒவ்வோர் 'ஏக்கர்' நிலமாக, இடம் ஒதுக்கும் ஏற்பாடு இப்போது நடைபெற்று வருகின்றது. சில அதிகாரங்களுக்கு ஓர் 'ஏக்க'ருக்கு மேலும் தேவையிருக்கலாம். ஆதலால், குருகுலத்தின் நிலப் பரப்பு நூற்றைம்பது 'ஏக்க'ருக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

திருக்குறளில், பாயிரம் நான்கு அதிகாரங்கள்; அறத்துப் பால் முப்பத்து நான்கு அதிகாரங்கள்; பொருட்பால் எழுபது அதிகாரங்கள்; இன்பம் பால் இருபத்தைந்து அதிகாரங்கள். இத் திட்டப்படியே நில அமைப்பும் பிரித்தமைக்கப் பெறும்.

தொடங்கும் இடத்திலிருந்து முதலிற் பாயிரப் பகுதிக்குரிய நிலங்கள் இருக்கும். "அறனீனும் இன்பமும் ஈனும், திறனறிந்து தீதின்றி வந்த பொருள்" என்னுந் திருக்குறளில், 'நல்வழியில் வந்த பொருள், அறத்தையும் தரும், இன்பத்தையும் தரும்' என்று திருவள்ளுவர் ஒரு முறை தெரிவிப்பதனால், பாயிர நிலப் பகுதியை அடுத்துப் பொருட் பாலுக்குரிய நிலங்கள் விளங்கும். அவற்றின் எதிரில், அப்பொருள் ஈனும் அறத்துப் பால் இன்பப் பாலுக்குரிய நிலங்கள் முறையே திகழும்.

ஒவ்வோர் அதிகாரத்தின் நிலப் பகுதியிலும் அவ்வவ்வதிகாரத்தின் கருத்துக் கேற்பச் செயல் நிகழும்.

திருக்குறளில் 'விருந்தோம்பல்' என்பது ஓர் அதிகாரம்; அவ்வதிகாரத்துக்குரிய நிலப் பகுதியில் அதனைச் செயற்படுத்த வேண்டும்; அதாவது அதைப் பற்றிய செயல் அங்கே நிகழவேண்டும்; வருவார் போவார்க்கு விருந்தோம்பல், மாணவர் அன்பர்க்கு உணவு விடுதி முதலிய நிகழ்ச்சிகள் நிகழ்தல்.

'மருந்து' என்பது ஓர் அதிகாரம்; இதற்குரிய நிலப் பகுதியில், இயற்கை மருத்துவ அமைப்புகள், மூலிகை வளர்ப்பு, மருந்துச் சாலை முதலிய செயல்கள் நிகழ்தல்.

'கேள்வி' என்னும் அதிகாரத்திற்குரிய பகுதியில் விரிவுரைகள், மெய்ந்நூற் பாடங்கள், இசை நிகழ்ச்சிகள் முதலியன நிகழ்த்துதல்.

(தொடரும்)

கலைப் பகுதி — உள வலிமைக்கு

முன் தொடர்ச்சி

# தில்லைத் திருக்கோயிலின் தொன்மையும் வளர்ச்சியும்.

(தேவராஜ விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேக வெளியீட்டிற் கண்டது)

கி. பி 730–முதல் 795–வரை யாட்சி புரிந்தவனும் காஞ்சிமா நகரில் வைகுந்தப் பெருமான் கோயிலைக் கட்டியவனும் பரம வைணவனுமாகிய நந்திவர்ம பல்லவன் என்பான், தில்லைப் பெருங் கோயிலில் திருச்சித்திர கூடம் அமைத்துத் திருமால் மூர்த்தத்தை எழுந்தருளவித்துத் தில்லை மூவாயிரவரைக் கொண்டு வழிபாடுசெய்வதற்கு ஏற்பாடு செய்தான். இவன் காலத்தில் விளங்கிய திருமால் அடியார்களாகிய திருமங்கை யாழ்வாரும் குலசேகர ஆழ்வாரும் தில்லைத் திருச்சித்திர கூடமாகிய இத்திருக்கோயிலை வணங்கி மங்களாசாசனஞ் செய்துள்ளார்கள்.

மூவாயிர நான்மறையாளர்
முறையால் வணங்க
தேவாதி தேவன் திகழ்கின்ற
தில்லைச் சித்திர கூடம்''

—(பெரிய திருமொழி 3 2-8)

எனத் திருமங்கையாழ்வாரும்,

''தில்லைநகர்த் திருச்சித்
திரகூடந் தன்னுள்
அந்தணர்கள் ஒரு
மூவாயிர வரேத்த
அணிமணி யாசனத்
திருந்த எம்மான்''

—(குலசேகரர் 10–2)

எனக் குலசேகர ஆழ்வாரும் தில்லை நகர்த் திருச்சித்திர கூடப் பெருமானைப் போற்றியிருத்தல் காணலாம்.

முதல் வரகுண பாண்டியன் காலத்தில் (கி. பி 792–835) விளங்கிய மாணிக்கவாசக சுவாமிகள் ''நலிமலி தில்லையுட் கோலமார் திரு பொதுவில் வருக'' என இறைவன் பணித்த வண்ணம் தில்லையை யடைந்து திருவாசகப் பதிகங்களையும் திருச்சிற்றம்பலக் கோவையையும் அழகிய திருச்சிற்றம்பல உடையாரே எழுதிக்கொள்ளும் படி அருளிச்செய்து நடராசப் பெருமானுடன் இரண்டறக் கலந்தார் என்பது வரலாறு மாணிக்கவாசகர் பாடிய திருக் கோவையாரில் ''வரகுணனுந் தென்னவ னேத்து சிற்றம் பலத்தான்'' எனக் குறிப்பிடுதலால் ''கோவரகுண மகா ராஜன்'' எனப் புகழ்பெற்ற முதல் வரகுண பாண்டியன் சிதம்பரத்தை யடைந்து நடராசப் பெருமானை வழிபட்டுப் பேரின்பத்தில் திளைத்தான் என்ற செய்தி நன்கு புலனுகிறது.

பதினொராந் திருமுறை யாசிரியர்களுள் ஒருவரும் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்து வந்தவரும் ஆகிய திருவெண்காட்டடிகள் என்ற பெயருடைய பட்டினத்தடிகள் ''கோயில் நான்மணிமாலை'' என்னும் பிரபந்தத்தால் தில்லைச் சிற்றம் பலத்து இறைவனைப் பரவிப் போற்றியுள்ளார்.

பகை மன்னர்களை வென்றடக்கிச் சோழ நாட்டையும் தொண்டை நாட்டையும் ஆண்ட பெரு வேந்தனுகிய முதல் ஆதித்தசோழன் என்பான் [கி. பி. 870 – 907] தான் கொங்கு நாட்டை வென்று கொணர்ந்த பொன்னைக் கொண்டு தில்லைய பலத்தின் முகட்டைப் பொன்னினுல் வேய்ந்தான் இத்திருத்தொண்டினை இவன் காலத்தவனாகிய நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில்

'சிங்கத் துருவனைச் செறறவ
சிற்றம்பல முகடு
கொங்கிற் கனக
மணிசந்த ஆதித்தன்''

—[65]

எனப்புகழ்ந்து பாராட்டுதோடு தில்லையம்பலவாண மீது கோயிற்திருப்பணியா விருத்தம் என்ற செந்தமிழ் பிரபந்தத்தையும் பாடி போற்றியுள்ளார்.

முதல் ஆதித்த சோழன் புதல்வனுகிய முதல் பராந்தகன் என்பான் [கி. பி. 907 – 953] தில்லையம் பலத்திற்குப் பொன்வேய்ந்தான் என ஆனைமங்கலச் செப்பேடும் திருவாலங்காட்டுச் செப்பேடுங் கூறுகின்றன. [E P. Ind. Vol XXII, No 34, S. I. I. Vol No. 3. No. 205] இவ்வேந்தருடைய புதல்வராகிய முதல் கண்டராதித்த சோழர் தில்லையம்பலப் பெருமானைப்பணிந்து தாம் பாடிய திருவிசைப்பாப் பதிகத்தில்.

''வெங்கோல் வேந்தன் தென்னன்
நாடும் ஈழமுங்கொண்டதிறற்
செங்கோற் சோழன் வேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல் வளையார் பாடியாடும்
அணிதில்லை யம்பலம்''

எனத் தந்தையின் திருப்பணியைக் குறிப்பிட்டுள்ளமை காணலாம்.

தொடரும்.

# விழித்துப்பார்!

(—கார்வண்ணன்)

அன்றோர்நாள் தமிழா நீ ஆண்ட நாளில்
அரசரிலே இருபிஞ்சாம் அரசக் குஞ்சு
மன்றமொன்றில் உமைமதித்துப் பேச வில்லை
மமதையினால் ஏசிவிட்டார் துள்ளுகின்றார்
என்றதொரு சொற்கேட்டாய் இமயம் சென்றாய்
இனியதமிழ்க் கொடிநட்டாய் கல்கொணர்ந்தாய்
இன்றெங்கே மறத்தமிழா அந்தவீரம்
ஏனும்மை ஆளுகின்றார் கல்சுமந்தார். 1

உண்மைக்கே உயிர்விட்ட தமிழர் இன்றே
ஊண் இன்றி உருக்குலைந்தும் தேய்ந்து போனார்
திண்தோளான் தமிழ்மன்னன் இமயம் போந்தான்
திடுக்கிட்டான் வடவேந்தன் கல்சுமந்தான்
வண்தோளார் சிதம்பரனார் கட்டபொம்மன்
வழிவந்தார் இந்நாட்டில் எங்கே போனார்?
அண்மையிலே கல்சுமந்த வடவர் இன்றே
ஆள்கின்றார் ஏனும்மை? ஒருசொற்கேளீர்! 2

தலைகொடுத்துக் கொடை வளர்த்தான் குமணன் [என்போன்
தன்போர்வை மயில்தந்தான் பேகன் என்போன்
அலைகொடிக்குத் தேரளித்தான் பாரியென்போன்
அடிபணிந்தார் பரங்கியரு மைத்துரைக்கே
மலை கன்றால் மகன் இழந்தான் மனுநற்சோழன்
மறுமையிலும் கொடை கொடுத்தான் சீதக்காதி
இலையே இன்றவர்வடவர் எழுச்சிபெற்றே
இந்நாட்டை ஆள்கின்றார்; ஒருசொற் கேளீர்! 3

எந்நாட்டுத் தோழர்களே எழுக இன்றே
ஏங்குகிறார் நம்நாட்டார் என்னவென்பேன்
அந்நாட்டார் வடநாட்டார் ஆளவந்தார்
அன்னிய இந்தியை இங்கே அழைக்கின்றாரே
தன்னாட்டு மானமற்றாய் தமிழா நீதான்
தயங்காமல் எழுந்துதமிழ் தழைக்கச் செய்வாய்
எந்நாளும் மணங்கமழும் தமிழா நீதான்
இனிச்சற்றும் உறங்காதே விழித்துப்பாரே!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செயல்களுக்கும் செலவழியாமல், தீய செயல்களைக் கடிந்தொதுக்கும் நல்லொழுக்க சீலர்களாகத் தகுதி பெறுவதற்கே செலவழிக்க வேண்டும். தெய்வ நம்பிக்கையில் உறுதி பெறுவார்களானால், நல்லொழுக்கங்கள் தாமாகவாழ்வில் அமைந்துவிடும். கல்வியறிவும் உண்மை நல்லறிவாகும். இத்தகைய கல்வி கற்று வெளிவருவோர் ஆட்சித் தலைமைகளில் இடம் பெற்றால்தான் இனி நாடும் நாடாகும்.

"உன்னை யாராவது பார்த்து நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று கேட்பின் 'பி. ஏ. படிக்கிறேன் பி. எஸ்ஸி படிக்கிறேன்' என்று சொல்லற்க. மட்களாட்சித் தலைமை தாங்கப் பயிற்சி பெறுகிறேன், என்று சொல்லுக'' என்றுபல்கலைக்கழக மாணவர்கட்கு அறிவுறுத்திய இராஜாஜியின் அறிவுரை அறிஞர் எல்லார்க்குமே இன்பம் பயப்பதாகும்.

தலைமைப் பதவிகளுக்குத் தக்கபடி உள்ளமும் உடலும் தகுதி பெற வாய்ப்பளிக்கும் நிலையங்களாகக் கல்லூரிகள் திகழ இறைவன் திருவருள் புரிக!

சி. து. க.

* * * *

**Phone: 55034 Tel. Enkaay**

**கைத்தறி ஆடைகளில்**
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

**பட்டாடைகளுக்கும்**
**நூலாடைகளுக்கும்**
**சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.
53, கிடங்குத் தெரு. சென்னை, 1.

## குருகுலச் செய்தி:

### மாணவர் இல்லம் உணவகத்திற்கு ஒரு நாள் செலவு ரூ. 20-0-0 (சிலர் மேலும்) ஏற்று அன்புடன் உதவியவர்கள்.

(இவர்களுக்கு ஓராண்டுக்கு 'முல்லைக் கொடி' தொடர்ந்து இலவசமாக அனுப்பி வைக்கப் பெறும்.)

முன் வரவு ரூ... 530-0-0

27. திரு. எஸ். என். வேணுகோபால், சண்முகம் வேர் ஹவுஸ் 21 - 22, ஈவினிங் பஜார், சென்னை, 3. 20-0-0
28. திரு, அய்யா. சுப்பிரமணிய முதலியார், தர்மகர்த்தர், ஸ்ரீ பிரசந்ந விநாயகர் கோயில், சென்னை. 3. 20-0-0
29. திரு. ஏ. எஸ். அப்பாஜி ரெட்டியார் (14-2-57) அம்மணங்கோயில், நெல்லிகுப்பம் (அஞ்சல்) 20-0-0

ஆக ரூ...590-0-0

### உணவகத்துக்கு உதவி

குருகுலச் செயற் குழுத்தலைவர் திரு. நா. சங்கரன் எம். ஏ. எல். டி. அவர்களும் குருகுலத்தின்பால் ஆர்வமும் அன்பும் கொண்டு அதன் வளர்ச்சியில் மிக்க ஊக்கம் காட்டும் பெரியார், சென்னை திரு. எஸ். பி. இராஜாபாதர், பி. ஏ. பி. எல், அட்வகேட் அவர்களும், ஆகிய இருவரும் செய்த முயற்சியின் விளைவாக,

திரு. கே. எம். அப்பு செட்டியார் அவர்கள்
(எண்ணெய் வியாபாரம்) 81, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, சென்னை-7

குருகுல மாணவர் இல்லத்துக்கு மாதந்தோறும் 8 வீசை நல்லெண்ணெய் அன்புடன் வழங்குவதாக ஒப்புக் கொண்டு, உடன் 8 வீசை நல்லெண்ணெய் ஒரு டின்னில் அனுப்பியுள்ளார்கள்.

திரு. கே. எம். பாரத்தசாரதி செட்டியார் அவர்கள்
(எண்ணெய் வியாபாரம்). 36. புரசவாக்கம் ஹைரோடு, சென்னை - 7.

குருகுல மாணவர் இல்லத்துக்கு மாதந்தோறும் 4 வீசை கடலை எண்ணெய் அன்புடன் வழங்குவதாக ஒப்புக் கொண்டு உடன் 4 வீசை கடலை எண்ணெய் அனுப்பியுள்ளார்கள்.

நன் கொடை யளித்துள்ள பெருமக்கள் இருவருக்கும், அவர்களிடமிருந்து பெற்றுத்தர முயற்சித்த இரு அறிஞர்களுக்கும், குருகுலத்தின் சார்பாக நம் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### ஆசிரியர் விரிவுரைகள்:

(நடைபெற்றவை)

சென்னை:

12 - 2 - 57 செவ்வாய்க்கிழமை, சென்னை மெரீனா கடற்கரையில் சர்வோதய மேளாவில் (காந்திஜியின் அஸ்தி கரைத்த நாள்) மாலை 4 - 30 மணிக்கு ஆசிரியர் திரு. இள வழகனார் அவர்கள் தலைமை வகித்தார்கள் — மேளாவில் நூல் காணிக்கை செலுத்தல் — பொது நூற்பு யக்ஞம் — பொது பிரார்த்தனை — சர்வோதயம் பற்றி விரிவுரை முதலியன நடைபெற்றன. சென்னை மேயர், திரு. கே. என். சீனுவாசன், திரு ஆக்கூர் அனந்தாச்சாரியார், இன்னும் பலர் பேசினர்.

(நடக்க இருப்பன)

குரோம்பேடு:

16-2-57, 23-2-57 சனிக்கிழமை தோறும் மாலை 6-00 மணிக்கு "திருஞான சம்பந்தர்" விரிவுரை.

சென்னை:

17-2-57, 24-2-57 ஞாயிற்றுக் கிழமை மாலை 6-மணிக்குச் சென்னை சென்னமல்லிகேஸ்வரர் கோயிலில், பெரிய புராணம்' விரிவுரை,

இதே முறையில் ஏனைய செயற் குழு உறுப்பினர்களும் மாணவர், அன்பர், ஆர்வலர்களும் தம்மால் இயன்றஅளவுமுயற்சித்துபொருள் களாகக் கூட பல வழிகளில் பெற்று குருகுலத்து மாணவர் இல்லத்துக்கு உதவ முன்வந்தால், குருகுல வளர்ச்சிக்கு வித்தூன்றியது போலாகும். அன்பர் கவனிப்பாராக. துணைவர். குருகுலம்.

### ஆர்வலர் சேர்க்கை

ஆண்டுக் காணிக்கை ரூ 5-0-0 செலுத்திக் குருகுலத்தில் ஆர்வலராகச்சேர்ந்துள்ளார் பட்டி. இவர்களுக்கு ஓராண்டுக்கு முல்லைக் கொடி தொடர்ந்து இலவசமாக அனுப்பிவைக்கப் பெறும்.

முன் வரவு...605

சென்னை:

| | |
|---|---|
| 122 பி. எம். தோலியா அவர்கள் | 5 |
| 123 பி. ஆ. முத்துக்குமாரசாமி | 5 |
| 124 ஜி. சுப்பராயன் | 5 |
| 125 ஞானசுந்தரம் | 5 |
| 126 ச. வீராசாமி | 5 |
| 127 ஜெ. நரசிம்மலு | 5 |
| 128 வி. ஆர். ராஜன் | 5 |
| 129 ஏ. ரத்னசபாபதி செட்டியார் | 5 |
| 130 டி. சுப்பிரமணிய செட்டியார் | 5 |
| 131 ஏ. ராஜமாணிக்கம் | 5 |
| 132 ச. சுப்பிரமணிய முதலியார் | 5 |
| 133 தி. வ. சிவக்கொழுந்து | 5 |
| 134 டி. ராமலிங்கப்பா | 5 |
| 135 ஆ. குழந்தைவேல் | 5 |
| 136 ப ருத்ரகோடி | 5 |
| 137 சி. டி. எதிராசலு | 5 |
| மதுரை: | |
| 138 எல். என். சுந்தரராஜய்யர் சன்ஸ் | 5 |
| ஆரணி: | |
| 139 வி. எ. கோதண்டராமன் செட்டியார் | 5 |
| பண்ருட்டி: | |
| 140 ஆர். கோவிந்தராஜ் | 5 |
| பெங்களூர். | |
| 141 பா. ச. பரமசிவம் | 5 |

ஆக ரூ...705

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்,
குருகுல அச்சகம், மதுராந்தகம் (அஞ்சல்); செங்கற்பட்டு மாவட்டம்: தமிழ்நாடு.